பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 56

31.07.2026

கடந்த 01.07.2026 முதல் 31.07.2026 வரை தமிழகத்தில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையால் 24 பொறிவைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அலுவல் ரீதியான பணிகளைச் செய்வதற்காக ரூ.500/- முதல் ரூ.1,00,000/- வரை லஞ்சம் கேட்டு பெற்ற அரசு ஊழியர்கள் (இணை ஆணையாளர் அறநிலையத்துறை, வட்டாட்சியர், இளநிலை உதவியாளர், உதவி மின் பொறியாளர், மின் வாரிய வணிக ஆய்வாளர், சமூக நல விரிவாக்க அலுவலர், கிராம நிர்வாக அலுவலர், இரண்டாம் நிலை காவலர், காவல் உதவி ஆய்வாளர், கிராம உதவியாளர், உதவியாளர், சர்வேயர், வயர்மேன், வருவாய் ஆய்வாளர், ஊராட்சி செயலர், இளநிலை உதவியாளர் (தேர்தல் பிரிவு), தலைமை உதவியாளர் / துணை வட்டாட்சியர், மாநில வரி அலுவலர் மற்றும் தூய்மை பணியாளர் (பொறுப்பு வருவாய் உதவியாளர்) ஆகியோர்கள்) கைது செய்யப்பட்டனர்.

மேலும் கிருஷ்ணகிரி, திருவள்ளூர், தேனி, கன்னியாகுமரி, திண்டுக்கல், தஞ்சாவூர், ராணிப்பேட்டை, சென்னை மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களில் 13 அரசு அலுவலகங்களில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆய்வு குழு அலுவலர்களுடன் இணைந்து அரசு அலுவலகங்களில் திடீர் சோதனை நடத்தப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அலுவலகங்களிலிருந்து கணக்கில் வராத ரொக்கம் ரூ.13,39,080/- கைப்பற்றப்பட்டது. மேலும் மாநில எல்லைகளில் அமைந்துள்ள 6 வாகன சோதனை சாவடிகளில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் வராத ரொக்கம் ரூ.9,87,890/- கைப்பற்றப்பட்டது. ஆக மொத்தம் திடீர் சோதனைகளில் ரூ.23,26,970/- கைப்பற்றப்பட்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் கடந்த

17.07.2026-ல் தமிழகம் முழுவதும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்கள் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்களுடன் இணைந்து தமிழகத்தில் உள்ள தாலுகா அலுவலகங்களில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.13,88,750/- கைப்பற்றப்பட்டது மற்றும் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் G-Pay பரிவர்த்தனைகள் ரூ.94,69,887/- கண்டறியப்பட்டது. மொத்தம் ரூ.1,08,58,637/-.

ஊழல் வழக்கில் 01.07.2026 முதல் 31.07.2026 வரை (4 வழக்குகள்) விழுப்புரம் ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம் மற்றும் திருவள்ளூர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றங்களால் அப்போதைய தாசில்தார், தாசில்தார் ஓட்டுநர், தாளாளர், தலைமை ஆசிரியை மற்றும் காவல் சார்பு ஆய்வாளர் ஆகியோர்களுக்கு 2 ஆண்டுகள் முதல் 4 ஆண்டுகள் வரை கடுங்காவல் சிறைத் தண்டனையும் ரூ.1,000/- முதல் ரூ.50,000/- அபராதமும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

PRESS RELEASE – 56
31.07.2026

Between 1st July 2026 and 31st July 2026, the Directorate of Vigilance and Anti-Corruption (DVAC) laid 24 traps across state on government officials (Joint Commissioner (Hindu Religious and Charitable Endowments Department), Tahsildar, Junior Assistant, Assistant Engineer (Electrical), Commercial Inspector of the Tamil Nadu Electricity Board, Social Welfare Extension Officer, Village Administrative Officer (VAO), Grade II Police Constable, Police Sub-Inspector, Village Assistant, Assistant, Surveyor, Wireman, Revenue Inspector, Panchayat Secretary, Junior Assistant (Election Wing), Head Assistant, Deputy Tahsildar, State Tax Officer, and a Sanitary Worker holding additional charge as Revenue Assistant) who demanded and accepted bribes ranging from Rs.500 to Rs.1,00,000 for performing official duties were arrested.

During the above period, DVAC officials, along with District Inspection Cell officers, conducted surprise checks at 13 government offices located in Krishnagiri, Tiruvallur, Theni, Kanniyakumari, Dindigul, Thanjavur, Ranipet, Chennai, and Karur. These inspections resulted in the seizure of Rs.13,39,080 in unaccounted cash from government offices. Additionally, surprise checks at six State border vehicle check posts led to the seizure of Rs.9,87,890 in

unaccounted cash. Altogether, Rs.23,26,970 unaccounted cash was seized, cases were registered, and investigations are underway.

On 17 July 2026, DVAC, along with the District Inspection Cell officers, DVAC carried out state wide surprise check in Taluk Offices across Tamil Nadu. The operation led to the seizure of Rs.13,88,750 in unaccounted cash and Rs.94,69,887 in suspicious financial transactions through G-Pay, bringing the total amount to Rs.1,08,58,637.

During the period from 1st July 2026 to 31st July 2026 (4 cases), Special Courts for Prevention of Corruption Act cases, as well as the Principal and Sessions Courts in Tiruvallur and Ranipet, convicted a Tahsildar, Tahsildar's Driver, Headmistress, Correspondent and a Police Sub-Inspector. The courts sentenced them to rigorous imprisonment ranging from two to four years, along with fines ranging from Rs.1,000 to Rs.50,000.
